# மண்டைதீவு, வவுனியா பாணியிலான வடமராட்சி கிழக்கு ராணுவ நடவடிக்கை


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 231 பிரசோற்பத்தி ஆடி 01 ( 17 - 07 - 1991 ) புதன்


ஆனையிறவு படையினரை மீட்பதற்காக வடமராட்சி கிழக்கு கடலோரத்தில் இறக்கப்பட்ட படையினர் எடுக்கும் இராணுவ நடவடிக்கை ஒப்பரேஷன் பலவந்தேய எனப் பெயரிடப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது. ஆனையிறவு படையினரை மீட்பதற்காக இப் படையினர் புலிகளின் கடும் எதிர்ப்பை வடமராட்சி கிழக்குப் பகுதியில் சந்திக்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப் பகுதியில் நடைபெற்ற மோதலில் இதுவரை 18 படையினர் பலியானதாகவும் 46 பேர் காயமடைந்துள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. இதே வேளை முன்னர் மூவாயிரம் படையினர் கரையிறக்கப்பட்டதாகக் கூறப்பட்டபோதிலும் ஆயிரம் படையினரே தரையிறக்கப்பட்டதாக பி. பி. ஸி. நேற்றுக் குறிப்பிட்டது. இதனிடையே வடமராட்சி கிழக்குக் கரையில் படையினர் இறக்கப்பட்டமை, முன்னர் விடுதலைப்புலிகளால் கோட்டை, மாங்குளம் இராணுவ முகாம்கள் தாக்கப்பட்டபோது -04 ஆம் பக்கம் பார்க்க

# கரையிறங்கிய படையின் முயற்சி

# 3ஆம் நாளாகவும் முறியடிப்பு

## ஆனையிறவு முகாமைச் சூழ புலிகள் புதிய நிலைகள் அமைப்பு

**வடமராட்சி கிழக்கு கடற்கரையில் இறக்கப்பட்ட படையினர் நேற்று 3ஆம் நாளாகவும் ஆனையிறவை நோக்கி ஊரியான் பகுதியூடாக முன்னேற எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. படையினரும் விடுதலைப்புலிகளும் தொடர்ந்து யுத்தத்தில் அப்பகுதியில் ஈடுபட்டுவருகின்றனர்,**

படையினர் முன்னேற எடுக்கும் முயற்சிக்கு ஆதரவாக நேற்று வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு.ஊரியான்பகுதிகளில் குண்டுவீச்சு விமானங்கள் கடுமையான முறையில் தாக்குதல் நடாத்திக்கொண்டிருந்தன.

விடுதலைப்புலிகள் கடும் எதிர்த்தாக்குதலினால் படையினர் நேற்று நண்பகல்வரை முன்னேற முடியாது தொடர்ந்து. வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகா வித்தியாலயத்திலும், அருகிலுள்ள பகுதிகளிலும் தங்கியிருந்ததாகப்பிந்திக்கிடைத்த —04 ஆம் பக்கம் பார்க்க

## ஆஸ்பத்திரி சேதம்

கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலில் மருதங்கேணி கிராம வைத்திய சாலையின் ஒரு பகுதி சேத —04 ஆம் பக்கம் பார்க்க

## மணலாறு மோதல் 12 வேங்கைகள் வீரமரணம்

நேற்றுமுன்தினம் மணலாறு மாவட்டத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாமைச் சுற்றிவளைக்க வந்த படையினருக்கும் வீடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது.

சுமார் 150 படையினர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்தனர். இவர்களை எதிர்த்து விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற மோதலில் 12 படையினர் பலியாகினர். படையினரின் ரி-50 துப்பாக்கி — 04 ஆம் பக்கம் பார்க்க

## 15 வயோதிபர்கள் படையினரிடம் சிக்கினர்

கடந்த சனிக்கிழமை கட்டைக்காடு - வெற்றிலைக் கேணிப் பகுதியில் தரையிறக்கப்பட்ட கடற்படையினரிடம் பொதுமக்கள் அகப்பட்டிருக்கலாம் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 15க்கும் மேற்பட்ட —04 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர் சொத்துக்கள் தாக்குதலில் சேதம்

நேற்று முன் தினம் நடைபெற்ற கடற்படைத்தாக்குதலில் பல கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதுடன் மீனவர்களின் சொத்துக்கள், உடமைகள் பலவும் சேதமாக்கப்பட்டுள்ளன.

தாக்குதல் ஆழியவளை, உடுத்துறை, வெற்றிலைக் —04 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கிழக்கில் பல படகுகள் சேதம்

கட்டைக்காடு இராணுவ நடவடிக்கைகளினால் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து சுண்டிக்குளம், வண்ணான் குளம், வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தெணியான், செம்பியன்பற்று ஆகிய இடங்களை நோக்கி இடம்பெயர்ந்த வண்ணமாக உள்ளனர்.

கட்டைக்காடு கிழக்குப் பகுதிகளாகிய நித்திய வெட்டை, கேவிள், போக்கறுப்பு, மண்டலாய், இயக்கச்சி, முகமாலை, மாசறு, சோரம்பற்று ஆகிய இடங் —04 ஆம் பக்கம் பார்க்க

## ஹெலியிலிருந்து கிரனைட் வீச்சு சிறுமி பலி; 13 பேர் காயம்

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியர் மீது ஹெலியில் இருந்து போத்தலில் அடைக்கப்பட்ட கிறனைட் வீசப்பட்டதில் ஆறு வயதுச் சிறுமி ஸ்தலத்தில் துடிதுடித்துப் பலியாகிய சம்பவம் நேற்று நடந்தது.

வடமராட்சி கிழக்குப் பகுதி வழியாக நேற்று மாலை 3.30 மணிக்கு வந்த ஹெலி திடீரென மேற்கொண்ட இத் தாக்குதலில் முதியோர் உட்பட 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதலில் அமல யூஜினி (6) என்ற சிறுமியே ஸ்தலத்தில் பலியானர். படுகாயமடைந்த 13 பேரின் விவரம் வருமாறு; ஜெ. இளைக்கரசி (10), சி. கலீபன் (08) ஜெ டேவிற் (10), ஜே. ராஜன் (10), ஜே. கௌசிகா (10), ஜே. யூஜினி (10),ஜே —04 ஆம் பக்கம் பார்க்க

## ஆழியவளைக் கடலில் மீனவரின் சடலம்

ஆழியவளைக் கடற்பரப்பில் கட்டுமரம் ஒன்றில் ஒருவர் இறந்த நிலையில் மிதந்து கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கடற்பரப்பில் கடற்படையினர் நிலைகொண்டிருப்ப — 04 ஆம் பக்கம் பார்க்க

## தென்மராட்சி நோக்கி தொடரும் நள்ளிரவுத் தாக்குதல்

பலாலியிலிருந்து தென்மராட்சிப் பகுதியை நோக்கி நேற்று முன்தினமும் நள்ளிரவு முதல் ஒருமணி நேரம் கடும்ஆட்லறி ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஷெல்களில் பல நுணாவில், சாவகச்சேரி, கொடிகாமம், உஷன், மீசாலை பகுதிகளில் விழுந்து வெடித்துச் சிதறியதனால் பல கட்டிடங்கள் சேதமடைந்தன.

கடந்த சில தினங்களாக தென்மராட்சிப் பகுதியை நோக்கித் தொடரும் நள்ளிரவு ஷெல்த்தாக்குதலினால் இப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

வயோதிபமாது உட்பட இருவர் இதனால் காயமடைந்துள்ளனர். (11)

## மணலாறில் மோதல் 10படையினர் பலி

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து மோதல் நடைபெற்று வருவதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்ற மோதலில் இதுவரை 10 படையினர் பலியானதாகவும் 23 படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## காயமடையும் படையை மீட்க கடலில் 'அம்புலன்ஸ் படகு'

வடமராட்சிக் கடலோரமாகக் கரையிறக்கப்பட்ட படையினரில் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் காயமடையும் சிப்பாய்கள் உடனுக்குடன் கடற்படைப் படகுகள் மூலம் அகற்றப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இதற்கென அம்புலன்ஸ் கடற்படைப் படகு ஒன்று நேற்றுக் காயமடைந்த, இறந்த படையினரை ஏற்றிச் சென்றவண்ணமுள்ளது.

காயமடைந்தவர்களை சிறிய படகுகள் கரையில் இருந்து ஏற்றிச்சென்று இந்த அம்புலன்ஸ் படகுக்கு அருகில் சென்று தரிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

பின்னர் அம்புலன்ஸ் படகு காரைநகர் பக்கமாகச் சென்றதாகக் கூறப்படுகிறது. (43,50)

## வடமராட்சியிலும் ஹெலி தாக்கு

வடமராட்சி கிழக்கில் ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடாத்திவிட்டு பலாலி நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் திடீரென நேற்று மாலை 5-30 மணியளவில் —04 ஆம் பக்கம் பார்க்க

தமிழக அரசுக்கு எச்சரிக்கை

ழத்தமிழ் அகதிகளை வெளியேற்றினால்

# இராமேஸ்வரம் பாலம் தகர்க்கப்படும்

தமிழ் நாட்டில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்ற எடுக்கும் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு தமிழக அரசு எச்சரிக்கப்பட்டுள்ளதாக சமாஜவாதி ஜனதாக்கட்சிப் பிரமுகர் டாக்டர் சுப்பிரமணியம்சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தமிழர்களை வெளியேற்றுவதை நிறுத்தாவிடின் இராமேஸ்வரம் பாலத்தைக் குண்டு வைத்துத் தகர்த்து விடப்போவதாகத் தமிழக அரசு எச்சரிக்கப்பட்டுள்ளதாக சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரத்தை இணைக்கும் இந்தப் பாம்பன் பாலம் தென் இந்தியாவிலேயே மிக நீளமானது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

□ □

## உற்சவம்

இன்று 17ஆம்திகதி பாண்டியன் தாழ்வு அருள்மிகு அர்ச். அன்னம்மாள் ஆலய நவ நாள்கள் ஆரம்பமாகின்றன.

தினமும் மாலை 4.30 மணிக்கு ஆராதனைகள் ஆரம்பமாகும். அங்கு அருட்திரு. ஞாயி பொன்னய்யா (அ. ம. தி.) அடிகளார் அருளுரை ஆற்றுவார். (10)

## பாடசாலை நூலகங்களின் விவரங்கள் சேகரிப்பு

இலங்கை முழுவதும் அமைந்துள்ள நூலகங்களின் பட்டியல் ஒன்றை ஸ்ரீலங்கா தேசிய நூலக சேவைகள் சபை உருவாக்கவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் பாடசாலை, பொதுசன, விசேட, கல்வி, தனியார், ஆலயங்களில் அமைந்துள்ள நூலகங்களின் பெயர்ப்பட்டியல் இதன் பொருட்டுதற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் மாகாணசபைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் இயங்கும் நூல்நிலையங்களின் விவரங்களை உடன் தருமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு கல்விப் பணிப்பாளர்களைக்கோரியுள்ளது. (28)

## தொடரும் கடும் காற்றினால் வாழைச் செய்கை பாதிப்பு

தொடர்ந்து வீசிவரும் பலத்த காற்றினால் வாழைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதங்களில் வீசிய பெரும் காற்றினால் பெரும்பாலான வாழைத் தோட்டங்களில் உள்ள வாழைமரங்கள் விழுந்து முறிந்திருந்தன.

மீண்டும் வாழைச் செய்கையில் வாழைச் செய்கையாளர்கள் ஈடுபட்டிருக்கும் வேளையில் காற்றுப் பலமாக வீசி மேலும் வாழைகளை விழுத்தி அழித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50)

## நல்லூர்க்கந்தன் உற்சவம் ஆகஸ்ட் 15 இல் ஆரம்பம்

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் இவ்வருட மஹோற்சவம் ஆகஸ்ட்மாதம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

24 ஆம் திகதி மஞ்சமும், செப்டம்பர் 6 ஆம் திகதி சப்பறமும், 7 ஆம் திகதி ரதோற்சவமும், 8 ஆம் திகதி தீர்த்த உற்சவமும், 9 ஆம் திகதி பூங்காவனமும், 10 ஆம் திகதி வைரவர் உற்சவமும் இடம் பெறும், (10)

---

கடந்த மாதம் கோலாகலமாக நடந்த முத்தமிழ் விழாவில் ''நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்'' என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெற்றது. அரங்கில் ஒலித்த கவிதை முத்துக்கள் சிலவற்றைக் கோர்த்துத் தருகிறோம்.

கோர்வை - 2

## ஓடுகின்றதேன்?

ஆண்டுபற் பல ஆன போதிலும்;
அந்நியன் துயர் தந்தபோதிலும்;
ஈண்டு வாழ்ந்திடும் எம்மிலோ சிலர்
எங்க ளின்னலை எண்ணவில்லையே!
மாண்டு போனநம் தமிழ ரெத்தனை?
மரணமுற்றமா வீர ரெத்தனை?
ஈண்டு தம்முடல் ஊனமுற்றவர்;
எதிரிகைபட இருப்பவ ரெத்தனை?

★

ஓடுகின்றனர்; ஓடுகின்றனர்;
நாடுவிட்டவர் ஓடுகின்றனர்!
தேடுகின்றதோர் செல்வம் சேர்க்கவா,
தேசம் விட்டவர் ஓடுகின்றனர்?
வீடுவாசலைத், தாயர், தந்தையை
விட்டுவிட்டவர் ஓடுகின்றதேன்?
பாடுபட்டுழைத் திந்த மண்ணுக்குப்,
பணம் அனுப்பவா ஓடுகின்றனர்?

★

இல்லவே இலை! எம்மி லேசிலர்
தொல்லை யற்றதோர் வாழ்க்கை தேடுறார்!
தொல்லை யற்றதோர் வாழ்க்கை யென்பது,
தொலைவி லுள்ளதா? வேற்று நாட்டிலே
கல்லுடைத்திடக்; கஞ்சல் கூட்டிடக்;
கானில் உள்ளதோர் அழுக்க கற்றிட;
புல்லு வெட்டிப்; புடவை தோய்த்திடப்;
பொதி சுமந்திட; முடியு மென்றிடில்,
சொந்த நாட்டிலே தொழில் புரியவா,
சோம்ப லுறுகிறீர்? வெட்கமில்லையா?

★

குண்டுகள் கண்டு மனந்தளரா நற்
கொள்கையர் எம்வீரர்! — பகை
கொண்டவர் வந்து களம்புகுமுன்தலை
கொய்பவர் எம்வீரர் — களம்
கண்டவர் அந்நியர் கண்டு நடுங்கிடும்
காளையர் எம்வீரர்! — அவர்
கொண்ட விலட்சியம் நன்கு முடித்திடக்;
கூறுவம் வாழ்த்துக்களே!

காரை. செ. சுந்தரம்பிள்ளை

(வளரும்)

---

உயர்தரக் கலைப்பாடத் திட்டத்தை

## மாற்றியமைக்க அரசு முடிவு!

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பின் கலைப் பிரிவுக்கான பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப் படவுள்ளன.

உயர்கல்வி அமைச்சு இதற்கான முடிவை அமைச்சரவையின் அனுசரணையுடன் எடுத்துள்ளது.

புதிய உயர்தரக் கலைப் பாடத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான ஆரம்ப திட்டங்கள் தற்பொழுது கல்விமான்களின் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கபபட்டுள்ளதாகவும்அறியப்படுகின்றது.ப-11.

---


யாழ்ப்பாண மாநகரசபை

## கூறுவிலை அறிவித்தல்

கீழ்க் காணும் அமைப்பு வேலைக்கும், தளபாட வினியோகத்திற்குமான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன.

01. குழாய்க் கிணறு அமைத்தல்.
02. விரிவுரை மண்டபக் கதிரைகள், வாசிப்பு மேசை, சாதாரண கதிரைகள், இறாக்கைகள்.

கூறுவிலைப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய இறுதித் திகதி 29-07-1991, பிற்பகல் 3.00மணியாகும்.

பூர்த்தி செய்யப்பட்ட கூறுவிலைப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 31.07.1991 நண்பகல் 12 00 மணியாகும்.

மேலதிக விவரங்களையும் கூறுவிலைப் படிவங்களையும் வேலைப் பகுதிப் பொறியியலாளரிடம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 15.07.1991.

07076



## சிறுவிளம்பரம்

**விற்பனைக்கு**

சகல தேவைக்குமான அழுக்கு போக்கி மில்க் வைற் திரவ சவர்க்காரம் (Liquid Soap) ½ போத்தல் ரூபா.45/- மட்டுமே. லேபலுடன் கூடிய வெற்றுப் போத்தல் ஒவ்வொன்றுக்கும் ரூபா. 2/-விற்பனை விலையில் தள்ளுபடி. 07067



நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கொள்வனவு

உள்ளூர் உற்பத்தி உணவுப் பொருள்

எமது சங்க எல்லைப் பரப்பினுள் உற்பத்தி செய்யப்படும் உப உணவு உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கீழ்க்காணும் தானிய வகைகளை விநியோகிக்க விரும்புவோர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். உடன் பணம் வழங்கப்படும்.

1. தினை  2. குரக்கன்  3. பயறு

த. பேரம்பலம்
பொதுமுகாமையாளர்

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
15. 7. 1991.

07077


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஆ. மகாலிங்கசிவம்
(நில அளவையாளர்)

ஈழத்தில்:
1942—12—01

இதயத்தில்:
1989—07—17

அப்பா என அழைப்போம் ஆசைபல தீர்த்திடுவாய்
தப்பாத ஊழ்வினையின் சார்பறியோம் - எப்போதும்
உன்னை நினைத்திடுவோம் உன்வார்த்தை நெஞ்சுவைப்
அன்னையெனக் காத்தாய்ஐ யா [போம்

மனைவி, மக்கள், உறவினர்.

வித்தகபுரம்-விழிதிட்டி,
தெல்லிப்பளை
1991-07-17

07074

## கண்ணீர் அஞ்சலி

### நெல்லை க. பேரன்

அந்தியிலே எம்முடன் கூடலிலே சேர்ந்திருந்து, கருத்துக்கள் பல கூறி, ஈற்றில் நன்றியுரையும் கூறிச் சென்றாயே. நள்ளிரவில் வெடித்த ஷெல் உன்னோடு மனைவியையும், மக்கள் இருவரையுமே கவர்ந்து சென்றது கண்டு நெஞ்சம் அதிர்ந்து கலங்குகின்றோம்.

மக்கள் விரும்பும் எழுத்தாளனாய், கவிஞனாய், நகைச்சுவைப் பேச்சாளனாய், நல்ல நண்பனாய், அத்தனைக்கும் மேலாக,

மனிதனாய் வாழ்ந்த உன்னை இனி எங்கு காண்போம்.

உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

'அறிவோர் கூடல்' நண்பர்கள்
பருத்தித்துறை

15 - 7 - 91

07078

முரசொலி

எ ம து  சி ந் த னை

17. 07. 1991

# அரச பயங்கரவாதம்

ஆட்சிப் பீடத்திலமர்ந்து அதிகாரம் செலுத்துவோரால் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச வன்முறையானது விஸ்வரூபமெடுத்துள்ளது.

போராளிகளை அடக்குவதாகக் கூறிக் கொள்ளும் ஸ்ரீலங்கா அரசு தனது பயங்கரவாதத்தை நியாயப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதைக் காண்கிறோம்.

தனது குறிக்கோளை அடைவதற்கு எந்தவழியையும் பின்பற்றலாம் என்ற நிலைப்பாட்டை அரசு கொண்டுள்ளது.

பயங்கரவாதத்தை ஒழிப்பதாகப் பிரகடனப்படுத்திய அதிகாரபீடம் தனது சொந்தக் குடிமக்கள்மீது பயங்கரவாதத்தைத் தங்கு தடையின்றிக் கட்டவிழ்த்து விட்டு அதன் அறுவடை கண்டு ஆனந்தம் கொள்கிறது.

ஜனநாயகத்தைப் பேணுவதும், சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதும், குடிமக்களைப் பாதுகாப்பதும் லட்சியமாகக் கொள்ளவேண்டிய அரசானது நெறிதவறி, முறைதவறி, ஜனநாயக மனித உரிமைக் கோட்பாடுகள் யாவற்றையும் மீறிச் செயற்படும்போது நாட்டை ஆளுவது அரசா அல்லது ஒரு கும்பலா என எண்ணத் தோன்றுகின்றது.

குடிமகன் ஒருவன் தனக்கு அநீதி இழைக்கப்பட்டால் அரசாங்கத்திடம் முறையிடுவான். அரசே குற்றம் புரிந்தால் அவன் யாரிடம் எடுத்துரைப்பான்.

உயிரழிவுகளை ஏற்படுத்தியும், தனிமனித சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் அட்டூழியச் செயல்களையும் அரச படையினர் துணிந்து புரியும் போது, தங்கள்செயல்களனைத்தும் ஆட்சிப் பீடத்தினால் ஆமோதிக்கப்படுமென்ற உணர்வும் தாங்கள் பாதுகாக்கப்படுவோமென்ற அசையாத நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்கின்றது.

இது விடயமாக ஜனநாயக பாதுகாப்புச் சங்கம் கொக்கட்டிச் சோலைப் படுகொலைபற்றி வெளியிட்ட கருத்து ஆணித்தரமாக அமைந்துள்ளது.

'அரச படையினர் பழிவாங்கும் நோக்குடன் கொக்கட்டிச்சோலையில் படுகொலையைப் புரிந்துள்ளனர். பல வீடுகளை எரித்துள்ளனர். தாங்கள் புரியும் எந்த வித கொடூரத்தையும் அரசு அனுமதிக்கும், அரசின் பாதுகாப்பு இருக்கும் என்ற உணர்வு இருப்பதனாலேயே துணிந்து இதைப் புரிகின்றனர். இக்கூற்றுக்குப் பின்னுள்ள நிதர்சன உண்மை பயங்கரமானது.

அரச படையினர் பயங்கரவாதத்தை மக்கள் மீது கட்டவிழ்த்து விடுவதற்கு அரசு பலவகைகளில் துணையாகவும், உடந்தையாகவும் செயற்பட்டுள்ளது.

1974 இல் தமிழாராய்ச்சி மகாநாட்டைத் திட்டமிட்டுக்குழப்பியதுடன் அப்பாவிப் பொதுமக்கள் ஒன்பதுபேர் மரணமாவதற்குக் காரணமானவர்கள் பதவி உயர்வு பெற்றனர்.

1979 இல் பொது ஜனத்தைப் பாதுகாப்பது என்ற போர்வையில் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய அன்றைய அரசு பிரிகேடியர் வீரதுங்காவை யாழ்ப்பாணம் அனுப்பியது. பல படுகொலைகள் அவர் மேற்பார்வையில் இங்கு நிகழ்ந்தன. அவரின் செயலுக்குப் பரிசாக அவர் பதவி உயர்த்தப்பட்டுப் பின் கனடாவுக்கு ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார்.

கொலை செய்வது அரச படை தனக்கு ஒரு தொழிலாக மேற்கொள்ளக்கூடிய உத்வேகத்தை ஆட்சி பீடம் உருவாக்கியுள்ளது. அந்தத் தொழிலுக்கு ஊக்குவிப்பாகப் பதவி உயர்வுகளும் சில சந்தர்ப்பங்களில் சன்மானங்களும் அரசு வழங்கியுள்ளது.

வடகிழக்கில் கொலைக் களங்களை உருவாக்கும் பேரினவாத அரசு வேறுநாடொன்றில் நிகழ்ந்த ஒரு கொலைக்கு முதலைக் கண்ணீர் வடிக்கிறது.

முதலைக் கண்ணீரோடு நின்று விடவில்லை. கொலையாளியைப் பிடிப்பதற்கு தனது புலனாய்வுத்துறை உதவி புரிவதாகவும் விநோதமான செய்தியை அனுப்பியது.

ரஞ்சன் விஜேரட்ணாவின் கொலையில் இந்த அரசின் புலனாய்வுத்துறை எதையுமே சாதிக்க முடியாத நிலையில் இந்தியாவில் நடந்த கொலைக்குப் புலன் விசாரணை செய்ய உதவுமாம்.

சர்வதேச மனித உரிமை பாதுகாப்புச் சபை, ஜனநாயக பாதுகாப்புச் சபை ஆகியவை இங்கு நிகழும் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டியும் அரசு உணருவதாயில்லை. சர்வதேச சமுதாயமாவது தட்டிக் கேட்கக் கூடாதா?.

★ பாராளுமன்றத்தில் அஷ்ரப்:

# புலிகளின் திடீர்த் தாக்குதல்களை அறியும் திறமை படைக்கு இல்லை

விடுதலைப்புலிகளின் திடீர்த் தாக்குதல்கள் எங்கெங்கு இடம்பெறும் என்பதை முன்கூட்டியே அறியக்கூடிய திறமை ஸ்ரீலங்காப் படையினருக்கு இல்லை என ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மிகநுணுக்கமாகத் திட்டங்களைத் தயாரித்து அவற்றை மிகத் திறமையாகச் செயற்படுத்திவருவதாகவும் அஷ்ரப் தெரிவித்துள்ளார். (33)

## 'பரந்தவெளியில் கரும்புலிகளின் மனோதிடத்துடன் போர் தொடர்கிறது'

''எமது மண்ணில் முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிலை கொண்டிருக்கும் எதிரியின் முகாமை அழித்து, தமது இரத்தத்தை ஆறாகச் சிந்திக்கொண்டிருக்கிறார்கள் எமது இளம் புலிகள்...... இரத்த ஆறு ஆனை இறவில் ஓடிக்கொண்டிருக்கும் அதே வேளை, அங்கே போராடிக் கொண்டிருக்கும் எமது நண்பர்கள், தமது சவப்பெட்டிகளையும் சுமந்து கொண்டேயிருக்கிறார்கள். பரந்த வெளியில் நிறைந்த மன உறுதியுடன் இந்த மண்ணை விடுவிப்பதற்காக, கரும்புலிகளின் மனோபலத்துடன் நின்று போராடிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் .....''

இவ்வாறு, உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற இருபது போராளிகளின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியிற் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் குறிப்பிட்டார்.

அவர், தொடர்ந்து பேசுகையில்:- ஆனை இறவில் பல வருடங்களாக எம் மக்கள் பட்ட கஷ்டங்கள், வேதனைகளுக்கெல்லாம் விடிவு காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனைஇறவு புலிகள்இறவாக மாறிக்கொண்டிருக்கிறது என்றார்.

யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜனின் தலைமையில் நடைபெற்ற இவ்வஞ்சலி நிகழ்ச்சியில் மகளிர் முன்னணி உறுப்பினர் செல்வி சந்திரிகாவும் உரையாற்றினார்.

## சிகிச்சைப்பிரிவு இடமாற்றம்

இதுவரை காலமும் யாழ் போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பகுதி மேல் மாடிக் கட்டிடத்தில் இயங்கி வந்த காது, தொண்டை, மூக்கு சிகிச்சை நிலையம் பழையவெளிநோயாளர் பகுதி தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திற்கருகில் உள்ள கட்டிடத்திற்கு இடம்மாற்றப் பட்டுள்ளது. (11 79)

## சார்க் விளையாட்டுப் போட்டி; பணமின்றித் திணறுகிறது அரசு

தென்கிழக்கு ஆசிய நாடுகள் அமைப்பின்(சார்க்)விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்குத்தேவையான 20 கோடி ரூபாவை ஈடு செய்வது எப்படியென்று தெரியாது ஸ்ரீலங்கா அரசின் விளையாட்டுத்துறை அமைச்சு திணறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி போட்டிகள் நடைபெற இன்னும் 5 மாதங்கள் மாத்திரமே உள்ளன.

ஆனால் ஸ்ரீலங்கா அரசின் நிதிநிலைமை மோசமாய் இருப்பதினால் ஒரு சிறு தொகையை மாத்திரமே கொடுத்துதவ முடியும் என்று திறைசேரி அறிவித்துள்ளது.

இதனால் இப் போட்டிக்கு அவசியமான மிகுதிப் பணத்தை விளையாட்டுத் துறை அமைச்சு, பிரபல்யமான வர்த்தக ஸ்தாபனங்களில் இருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளத் தன்னால் ஆன முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டுள்ளது.

இதன் பயனாக மகாராஜா ஸ்தாபனம் 8 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணமும், ஆயிரம் ரீ சேட்டுக்களும் அன்பளிப்புச்செய்ய முன்வந்துள்ளது. (16)

## கைப்பணிப் பயிற்சி

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் 2.8 91 தொடக்கம் 3 மாத கால பனம் பொருள் கைப்பணிப் பயிற்சிநடாத்தப் படவுள்ளதுசேரவிரும்புவோர் 20 ஆம் திகதி காலை 8.30 மணிக்குநிலையத்திற்குச்சமுகமளிக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## எயிட்ஸ் நோயினால் பாதிப்புற்ற பெண்பிரசவித்தகுழந்தை நலத்துடன்

இலங்கையில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இன்னும் உயிருடன் உள்ளதாக எயிட்ஸ் நோய் தடுப்பு இயக்கத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பத்து இலங்கையர்களுக்கு எயிட்ஸ் நோய் பீடித்திருந்தது. அவர்களில் எட்டுப்பேர் கடந்த ஒரு வருடத்துக்குள் மரணமாகியுள்ளனர்.

இலங்கையில்உள்ள எயிட்ஸ் நோயாளியான பெண் பிரசவித்த குழந்தைக்கு தற்போது பதினைந்து மாதமாகிறது. இதுவரை அக்குழந்தையின் உடலில் எயிட்ஸ் நோய்க்கான கிருமிகள் காணப்படவில்லை எனவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (33)

## தமிழ்நாடு காவற்துறை தலைமைகளில் பெரும் மாற்றம்

தமிழ் நாட்டில் மாவட்ட நிருவாகத்திலும், காவற்துறை மாவட்ட அமைப்பிலும் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஏழு மாவட்ட ஆட்சித் தலைவர்களும், 11 காவற்துறைக் கண்காணிப்பாளர்களும் அங்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஜெயலலிதா அரசு பதவியேற்றதன் பின்னர் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும் மாற்றமாக இது கருதப்படுகின்றது.

## மாமல்லபுரத்தில் பயிற்சி

பௌத்த விகாரைகளை தமிழகம் மாமல்லபுர சிற்பங்களின் அடிப்படையில் அமைப்பதற்கான முயற்சியில் கலாசார அமைச்சு ஈடுபட்டுள்ளது.

இதன் பொருட்டு சிங்கள சிற்பிகளுக்கு மாமல்லபுரம் சிற்பிகளைக் கொண்டு பயிற்சி வழங்கும் திட்டமொன்றை கங்காராம விகாரை மேற்கொண்டுள்ளது.

## 70 சுகாதாரப் பரிசோதகர்களுக்கு யாழ் மாவட்டத்தில் பற்றாக்குறை

இன்றைய சூழ்நிலையில் மனித சமுதாயம் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். அதனை உணர்த்துவதற்காகநாம்ஒவ்வொருவரும்பாடுபடவேண்டும். யாழ் மாவட்டத்தில் தேவையானபொது சுகாதாரப் பரிசோதகர்களின் எண்ணிக்கை 100 ஆகும் ஆனால் கடமையில் இருப்பவர்களின் எண்ணிக்கை 30 ஆகும்.

இவ்வாறு சுகாதாரப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் என். கனகசபை குறிப்பிட்டார்.

இணுவிலில் தற்காலிகமாக இயங்கும் தெல்லிப்பழை சுகாதாரப் பணிமனையில் இப்பயிற்சி வகுப்பு இடம் பெறுகிறது. (ப 12)

## 1980 வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட யாழ் ஊழியர்க்கு நிலுவை இல்லை

1980 ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை இழந்து மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களில் பலருக்கு இன்னமும் பாக்கிச் சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளி மாவட்டங்களில் பணி புரியும் இந்த ஊழியர்களுக்குப் பாக்கி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துப் பாதிக்கப்பட்டவர்கள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடன் தொடர்பு கொண்டும் சாதகமான பதில் வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (37)

ஷெல் வீச்சுக்குக் குடும்பத்தோடு பலியாகிய எழுத்தாளர் நெல்லை க. பேரன் பல்துறை ஆற்றல் வாய்ந்தவர். 'பேரன் கவிதைகள்' தொகுதியில் உள்ள 'துடிக்கும் இதயம்' என்ற கவிதையை அவருக்கு அஞ்சலியாக வெளியிடுகிறோம். வடமராட்சி ''ஒப்பறேஷன்'' அநுபவத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட இக்கவிதை இன்றைய சூழ்நிலைக்கும் பொருத்தமாவது ஒரு புறமிருக்க, கவிஞனுடைய அச்சம் இவ்வளவு தூரம் அச்சொட்டாக நிருபணமாகியுள்ள சோகம் நெஞ்சைப் பிழிகிறது.

## துடிக்கும் இதயம்

சங்கத் தமிழாலே தாலாட்டுப்பாடி என் தன்
தங்கக் குழந்தையை நான் நித்திரையாக்கிவிட்டால்
திடீரென்று கேட்கும் வெடிச்சத்தம் எங்கோ
அர்த்த ராத்திரியில் ஆசையாய் மணம் முடித்த
அன்பு மனையாளைக் கட்டியணைத்து ஒரு முத்தம் தரவென்று
சிந்தையில் நினைத்திட்டால் கேட்கும் ஒரு குண்டுச் சத்தம்
நெஞ்சு கலங்கி என் வேட்கையும் கலைந்து மிக்க
வேதனையோடு நான் முகத்தைத் திருப்பிடுவேன்.
வேதனையோடு நான் முகத்தைத் திருப்பிடுவேன்
குண்டுகள் வந்து கூரையைத் துளைத்தாலும் என்று
கட்டிலின் அடியினிலே பிள்ளையை பெண்டிலை நான்
தள்ளியே சாக்கால் மூடிப் பதுங்கியே பதகளிப்பேன்
கறுப்புக் கழுகுகள் ஆகாயத்தில் வட்டமிட்டால்
ஐயோ வென்று அலறும் இதயம்
எப்பெப்ப... என்னென்ன... எங்கேயோ என்றெல்லாம்
எண்ணி ஏங்கித் தீய்ந்து கருகி
உருகி வாடும் பாழும் இதயம்.
துளிர்க்கத் துடிக்கும் ஆனால் நாட்டிலோ
ஈரலிப்பு இல்லையே........

(1987 யூலை)

## சங்கானையில் அஞ்சலி

ஆனையிறவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் வீரமரணமடைந்த மூன்று போராளிகளின் புகழுடல்கள் நேற்று சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு நின்று அஞ்சலி செலுத்தினார்கள்.

காரைநகரைச் சேர்ந்த நியூட்டன், மிருசுவிலைச் சேர்ந்த யாசீர், தாளையடியைச் சேர்ந்த முகுந்தன் ஆகிய வேங்கைகளின் புகழுடல்களே அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. (13)

## 31 ஆம் நாள நினைவஞ்சலயும வீட்டுக்கிருத்தியமும்



### அமரர் சபாரத்தினம் தர்மராஜா

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்
கட்டிட திணைக்களம் கொழும்பு)

மலர்வு: 31-05-1923 உதிர்வு: 17-06-1991

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கான அன்புத் தெய்வமே! நீங்கள் திடீரென எங்களைப் பிரிந்து எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்டீர்கள் உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது இருக்கும்.

துயர்மிகு இவ்வேளையில் துணையாய் நின்ற அன்புள்ளங்களுக்கும், அனுதாபச் செய்தித் தாள்களால் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது மனப்பூர்வ உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவை பிராத்திக்கிறோம்

அன்னாரின் பிரிவில் துயருறும் குடும்பத்தினர்.

சாயிநிவாஸ்,
ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய். 07079

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 17.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சாக்கு உரப்பைகளை வழங்குமாறு

# புலிகள் அவசர வேண்டுகோள்

ஆனையிறவுப் போர் விரிவடைந்து செல்கின்றது. கடற்கரைகளிலும் பொட்டல் வெளிகளிலும் சண்டை நடக்கின்றது. போராளிகள் இலகுவாகச் சண்டையைத் தொடர்வதற்கு ஏற்ற விதத்தில் காப்பரண்கள் அங்கு இல்லை. எனவே செயற்கையான காப்பரண்களைச் செய்யவேண்டிய நிலையில் உள்ளோம் இவ்வாறு விடுதலைப்புலிகள் விடுத்த அவசர வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்மூடைகள் பெருமளவில் தேவைப்படுகின்றது. அதேசமயம் விரைவாகத் தேவைப்படுகின்றது. மண்மூடை தயாரிப்பதற்குரிய சாக்கு, உரப்பை, சாக்குஊசி சணல் மண்வெட்டி, சவள், பிக்கான் என்பவற்றை மக்களிடமிருந்து அவசரமாக எதிர்பார்க்கின்றோம்.

தரையிறக்கப்பட்ட இராணுவத்திற்கும், ஆனையிறவு முகாமுக்கும் இடைப்பட்ட தூரம் 5 மைல்கள் மட்டும் தான். இது மிகக் குறுகிய தூரம் எதிரியினது நகர்வைத் தடுக்கப் போராளிகள் ஒவ்வொருகணமும் உயிரைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

தென்மராட்சியில் சாவகச்சேரி கொடிகாமம் பிரதேசக் காரியாலயங்களிலும். வடமராட்சியில் நெல்லியடி, பருத்தித்துறை, உடுப்பிட்டி பிரதேசக் காரியாலயங்களிலும். வலிகாமத்தில் கோப்பாய், சுன்னாகம், சங்கானை பிரதேசக் காரியாலயங்கள், மற்றும் கோண்டாவில் மாவட்டச் செயலகத்திலும் கொண்டுவந்து உடனடியாக ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றோம். இன்று மாலை இக்குறிப்பிட்ட இடங்களில் பெருமளவு பொருள்களை எதிர்பார்க்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வலி.வடக்கு மக்கள் குறித்து அரச அதிபருடன் பேச்சு

வலிகாமம் வடக்கில் இருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வெளியிடங்களில் தங்கியுள்ளவர்களின் பிரச்சினைகள் குறித்து யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக் கழகம் இது தொடர்பான பதினைந்து கோரிக்கைகளை அரச அதிபரிடம் சமர்ப்பித்துள்ளது.

## வடமராட்சி கிழ. மக்களுக்கு செஞ்சிலுவை நிவாரணம்

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, இயக்கச்சி ஆகிய பகுதிகளில் இருந்து வெளியேறி வேறு இடங்களில் தங்கியுள்ளவர்களுக்கு ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

இவர்கள் தங்கியிருக்கும் இடங்களில் வைத்தே இந்த நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

### ஆஸ்பத்திரி...

மடைந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு மருதங்கேணிப் பகுதியை நோக்கிகடற்படைக்கப்பல்கள் மேற்கொண்ட தாக்குதலிலேயே மேற்படி வைத்தியசாலையின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. 43,50

### வடமராட்சி...

களில் வசிக்கும் பெரும்பாலான மீனவக் குடும்பங்கள் தினமும் இடம்பெயர்ந்து பருத்தித்துறைக்கும் நாகர் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் தஞ்சம் அடைந்த வண்ணமுள்ளதாக எமது நிருபர்கள் அறிவிக்கின்றனர்.

இத்தாக்குதல்களின் போது நித்திய வேட்டை, வெற்றிலைக்கேணி, வண்ணான்குளம் மண்டலாய் போன்ற இடங்களில் பெருமளவு படகுகள், கட்டுமரங்கள் சேதமடைந்தன. (10, 11, 50)

### மணலாறு...

ஒன்றும் மீட்கப்பட்டது.

இம்மோதலில் 12 வேங்கைகள் வீரமரண மடைந்தனர். கப்டன் மனோ (கோ. ஸ்ரீதரன் திருமலை) கப்டன் பசிலன் (ச. விமலநாதன் முல்லைத்தீவு) லெப். குஞ்சன் (இ. சந்திரகுமார் முல்லைத்தீவு) குசேலன் (டே. சுரேஷ் மட்டக்களப்பு) 2ம் லெப். ரகுநாத் (தி. பிரகாஷ் வல்வெட்டித்துறை) 2ம் லெப். ராசேந்திரம் யாழ்ப்பாணம் பிரின்ஸ் (மா. திமாலழகன் திருமலை) 2ம் லெப். பாபு (அ. மனோகரன் மட்டக்களப்பு) லெப். ஞானி (த. சிவநாதன் திருமலை) ஜெயசீலன் (பு. அரிய விக்னராசா மட்டக்களப்பு) லிங்கதன் (அ. தவகுமார் மானிப்பாய்) பிரமிலன் (செ. சதீஸ்வரன் திருமலை) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

### கரையிறங்கிய...

செய்திகள் தெரிவித்தன.

படையினர் இறக்கப்பட்ட பகுதி ஆனையிறவு முகாமில் இருந்து 6 மைல் தொலைவிலுள்ள பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கடற்படையினர் பீரங்கிப் படகுகள் மிகவும் தொலைவில் நிலை கொண்டபடி கரையை நோக்கித் தாக்குதல் நடாத்தி வருகின்றன.

ஆனையிறவு இராணுவ பிரதான முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்றுவிடுதலைப் புலிகள் புதிய நிலைகளை ஏற்படுத்தியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. 50, 43, ப-11, 74, 79

### மீனவர்...

கேணி, கட்டைக்காடு ஆகிய பகுதிகளிலேயே நடைபெற்ற போதிலும் வெற்றிலைக்கேணியில் அகோரத் தாக்குதல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது 43,50

### மண்டைதீவு

மற்றோர் முனையில் படையினரை நகர்த்தியதையே காட்டுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

கோட்டை முகாம் தாக்கப்பட்டபோது மண்டைதீவிற்கும், மாங்குளம் தாக்கப்பட்டபோது வவுனியா காட்டுப்பகுதிக்கும்வேறுஒருபடைப் பிரிவு நகர்த்தப்பட்டமை தெரிந்ததே.

### 15 வயோதிபர்கள்...

பொதுமக்களே படையினரிடம் அகப்பட்டிருக்கலாம் எனவும் இவர்களில் அநேகமானோர் வயோதிப மீனவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் சிலர் இடம்பெயரமுடியாத நிலையிலேயே படையினரிடம் அகப்பட்டவர்கள் எனவும் படையினரின் நடவடிக்கையினால் நோய்வாய்ப்பட்டிருக்கலாம் எனவும் தெரியவருகிறது. (50, 43)

### ஹெலியிலிருந்து ..

கொன்சிலேற் (31), ஜே. புவிராஜ் (08), நா. கிறிஸ்ரிராஜன் (05), நா. கிரேண்சியா (33), ரி. ஞானப்பிரகாசம் (37), க. கமலவதனா (10), டேவிற் கிறிஸ்ரி (04) ஆகியோர் ஆகும். 50, 43

### வடமராட்சியிலும்...

நெல்லியடி, கரவெட்டிப் பகுதியில் கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இக் கிரனைட் தாக்குதலால் ஏற்பட்ட சேதவிவரங்கள் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. 50, 43

### ஆழியவளைக்...

தால் இவரை மீட்கமுடியாத நிலை உள்ளது.

பெரும்பாலும் நேற்று வெற்றிலைக்கேணியில் இருந்து மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர்களில் இவரும் ஒருவராகலாம் எனக் கூறப்படுகின்றது. 43, 50

திரு. ஜோ. எகட்டன் வழங்கும்
ஆடிக்கூழ்
இன்று ஆடிப்பிறப்பில்
ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்
19/3, கொழும்புத்துறைச்சாலை
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 07080

## காலமானார்

### தோமா ஜேக்கப்

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மாகியப்பிட்டியை வதிவிடமாகக் கொண்டவருமான தோமா ஜேக்கப் (வானொலி இயக்குநர் பொலிஸ் திணைக்களம்) காலமாகி விட்டார் இவரது நல் அடக்க ஆராதனை 08 — 07 — 91 இல் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மாசியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர் 07075